## எஸ் பி ஐ ஓ ஏ சீனியர் செகண்டரி பள்ளி

வகுப்பு : நான்கு தேதி:04. 05. 2020

நாள்:திங்கள்

## செயல்பாடு - 5

## தொகுதி - 1

### 2020 - 2021 கல்வியாண்டில் நுழைவதற்கு முன் அன்பு குழந்தைகளே உங்களுடன் தமிழாசிரியர்.

2020 - 2021 ஆம் கல்வியாண்டு பல போராட்டங்களோடும், சவால்களோடும் நாம் எதிர்கொண்டாலும் இக்கல்வி ஆண்டு உங்களுக்கு பலவிதமான நன்மைகளோடு முடியும் என்பதில் ஐயமில்லை.

வித்தியாசமான முறையில் வீட்டிலிருந்தே இக்கல்வியாண்டை துவங்கினாலும் முதலில் அன்பு குழந்தைகளே உங்கள் உடல் நலன் மிக முக்கியம்.நோய் எதிர்ப்பு சக்தி தான் கொரோனவை எதிர்கொள்ளும் அற்புத அருமருந்து. காய்கறிகள்,கீரைகள் பழங்கள்,பனவெல்லம், நாட்டுச் சர்க்கரை, பால், குறிப்பாக (முருங்கை கீரை) காரணம் கியூபாவின் அதிபர் பிடல் காஸ்ட்ரோ பெரிய காலரா தொற்று ஏற்பட்ட போது,நோய் எதிர்ப்புச் சக்திக்கு இந்தியாவிலிருந்து கொண்டு சென்ற முருங்கை கீரையை பெருமளவில் பயன்படுத்தி கியூபா தேசத்தையே மீட்டதாக பிடல் காஸ்ட்ரோ நெகிழ்ச்சி பொங்க கூறியுள்ளார்.

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு முருங்கை மரமும்,ஒரு எருமை மாடும் இருந்தால் அந்தக் குடும்பம் நோயற்ற குடும்பமாக பசி பட்டினியை எதிர்த்து போராடும் குடும்பமாக இருக்கும் என்பது நம் முன்னோர்கள் கண்ட உண்மை.

அன்பு பெற்றோர்களே வாரம் இருமுறையாவது முருங்கை கீரையை

உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

முருங்கை தின்றவன் வெறுங்கையோடு செல்வான் என்பது பழமொழி அதாவது,

முருங்கையில் முந்நூறு சத்துகள் உள்ளன. அதனால் வயது ஆனாலும் குச்சி ஊன்றாமல் நிமிர்ந்து செல்வான் என்பதே இதனுள் ஒளிந்திருக்கும் உண்மையாகும். சமீப காலமாக குழந்தைகள் மருத்துவமனைக்குச் செல்வதில்லை. காரணம் கொரோனா பாதிப்பு என்பது காரணம் அல்ல. வீட்டு உணவுகளேயே சாப்பிடுகிறார்கள் துரித உணவுகளை சாப்பிடுவதில்லை.இப்போது புரிகிறதா பிரச்சனை என்பது வீட்டில் இல்லை வெளி உணவுகளில் தான் உள்ளது.

இந்நிலை கட்டுபாடுகளால் நமக்குக் கற்பிக்கப்பட்ட புதிய கீதாசாரம், தொடர்ந்து வீட்டு உணவுகளில் கவனம் செலுத்தி இயற்கையோடு இயைந்து நோயற்ற வாழ்வு வாழ இந்த ஆண்டில் நான்காம் வகுப்பு குழந்தைகளாகிய உங்களை வாழ்த்தி வரவேற்கிறேன்.

## <u>அன்னைத் தமிழே</u>

அன்னைத் தமிழே - என்
ஆவி கலந்தவளே
என்னை வளர்ப்பவளே
என்னில் வளர்பளே
உன்னைப் புகழ்வதற்கே
உலகில் பிறப்பெடுத்தேன்
சொல்லில் விளையாடச்
சொல்லித் தந்தவளே
சொல்லில் உனது புகழ்
சொல்ல முடியலையே.

-

- நா.காமராசன்

தாய்க்கு அடுத்த நிலையில் நம் நாவில் நடனமாடுபவள்

சரஸ்வதியாகிய நம் தாய் மொழியே. நம் உடலில் ,உயிரில் கலந்தவள் நம் தாய்மொழியாகிய தமிழே.ஒன்றுமில்லாத என்னை அழகாக வளர்த்து என்னில் தினம் வளர்பவளே
இப்பிறப்பு பிறந்தன் பிறவி பயன் உன்னைப் புகழ்வதற்கு மட்டுமே.
வார்த்தையில் விளையாடுவதற்கு கற்றுத் தந்தவளே இந்த வெற்று வார்த்தையால் மட்டும் உன்னை புகழ்ந்து விட முடியாது.
தாய் தமிழே சிரம் தாழ்ந்து வணங்குகிறேன்.வார்த்தையில் விளையாட வரம் வேண்டி நிற்கிறேன்.

## பயிற்சி - 1

1.சிறப்படைந்தேன் பிரித்து எழுதக் கிடைப்பது : சிறப்பு + அடைந்தேன்
2.என்னில் என்ற சொல்லின் பொருள் : எனக்குள்
3.ஒரே ஓசையில் முடியும் சொற்களை எழுதுக : வளர்பளே தந்தவளே
4.சொல்லில் விளையாடச் சொல்லித் தந்தவள் யார்? தமிழன்னை
5.எதைச் சொல்ல முடியவில்லை என ஆசிரியர் குறிப்பிடுகிறார்?
தமிழன்னையின் புகழைச் சொல்ல முடியவில்லை என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.
6.இப்பாடலின் ஆசிரியர் அன்னைத் தமிழை எவ்விதம் புகழ்கிறார்?
இப்பிறப்பே உம்மை புகழ்வதற்கு மட்டுமே என புகழ்கிறார்.

**எஸ்.பி.ஐ.ஓ.ஏ சீனியர் செகண்டரி பள்ளி. திருச்சி - 07.**

**வகுப்பு: IV** **தேதி:18.05.2020**

**நாள்: திங்கள்**

## செயல்பாடு - 06

அன்பு குழந்தைகளே!

நாம் அன்னைத் தமிழே பகுதியைப் பார்த்தோம் இப்பகுதியில் பனைமரச் சிறப்புகளைப் பற்றியும் அதன் பயன்களைப் பற்றியும் விரிவாக காணலாம். தமிழ்நாட்டின் மாநில மரம் பனை மரம். பனைமரம் புயலிலிருந்து நம்மை பாதுகாக்கிறது சிறந்த காற்றுத் தடுப்பான் ஆக உள்ளது நிலத்தடி நீர் குன்றாமல் பாதுகாக்கிறது.

**பனை மரத்திலிருந்து கிடைக்கும் பயனுள்ள பொருட்கள்:**

பனங்கருப்பட்டி

பதனீர்

பனங் கற்கண்டு

நுங்கு

பனை ஓலையால் செய்த கைவினைப் பொருட்கள் கூடை, முரம் மற்றும் அழகு பொருட்கள் நமக்கு பிளாஸ்டிக் (நெகிழி) என்று அனைத்து தன்மையிலிருந்து விடுபட உதவுகிறது.

**பனைமரமும் இன்றைய சூழலும்:**

அக்னி வெயில் நம்மை ஆட்டிப்படைக்கிறது அதிலிருந்து விடுபட நுங்கு, பதநீர் ஒரு அற்புத மருந்தாகும். குழந்தைகளுக்கு வியர்வைகொப்பளங்களில் இருந்து விடுபட நுங்கு தண்ணீர் நல்ல மருந்தாகும். பனங்கருப்பட்டி சர்க்கரை நோய்க்கு எதிரான ஒரு மாமருந்து உடலில் இரத்த ஓட்டத்தை சீராக வைத்து

நம்மை சுறுசுறுப்பாக இயங்க வைக்கிறது நோய் எதிர்ப்பு சக்திக்கும் மிகுந்த துணைபுரிகிறது விலை கூடுதலாக இருந்தாலும் அதன் பயன்கள் ஏராளம். இவ்வளவு சிறப்புள்ள பனைமரத்தை அரசே முன்வந்து பாதுகாக்கவேண்டும் செங்கல் சூளை விறகிற்கு  பனை மரம் வெட்டப்பட்டு அதன் பெரும்பாண்மை அழிக்கப்பட்டுவருகிறது. இதனை உடனே தடை செய் திகள் மகத்துவம் போற்றுவோம்.

**பயிற்சி வினாக்கள்**

1. நமது மாநில மரம் எது?

    நமது மாநில மரம் பனை மரம் ஆகும்

2. பனை மரத்தின் பயன்கள் யாவை?

    நிலத்தடி நீரை பாதுகாக்கிறது.  சிறந்த காற்று தடுப்பான் ஆக உள்ளது.

3. பனைமரத்தின் அழிவுக்கு காரணம் என்ன?

    பனைமரம் செங்கல்     சூளையால்  அளிக்கப்படுகிறது.

4. பனங்கருப்பட்டியின் மருத்துவ குணம் யாது?

    சர்க்கரை நோயிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறது.

**எஸ்.பி.ஐ.ஓ.ஏ சீனியர் செகண்டரி பள்ளி**

**வகுப்பு:நான்கு** **செயல்பாடு - 07** **நாள்:வியாழன்**

**தேதி:28/05/2020**

**ஏழு இறக்கை குருவியும் தெனாலிராமனும்**

**பயிற்சித்தாள்**

**I. சொல்லின் இடையில் ஓர் எழுத்தைச் சேர்த்து புதிய சொல்லை உருவாக்குக.**

1. கதை (எ.கா) : கவிதை
2. படு -
3. குவி -
4. எது -
5. அவை -
6. ஆம் -
7. கவி -
8. பாவை -
9. பகு -
10. வசை -

**II. வினா -விடை**

1. விஜயநகர அரசின் அவைப்புலவர் யார்?

   தெனாலிராமன்

2. விஜயநகரம் விழாவிற்கு வந்த அரசர் யார்?

   விஜயவர்த்தனன்

3. விஜயநகரத்தின் அரசர் யார்?

   கிருஷ்ணதேவராயர்

4. ஏழு இறக்கை குருவிஎப்படி நிறம் மாற வேண்டுமென அரசர் கூறினார்?

   காலையில் தங்க மஞ்சள் நிறம், சிவப்பு நிறம், இரவில் ஏழு இறக்கையோடு பறக்கவேண்டும்.

5. குருவி அரசனிடம் சொன்னதாக தெனாலிராமன் என்ன கூறினார்?

   காலை பொழுது, மதிய பொழுது இரவு பொழுது இல்லாத ஒரு பொழுதில் ஏழு இறக்கையோடு வருகிறேன் என குருவி சொன்னதாக சொன்னார்.

# எஸ்.பி.ஐ.ஓ.ஏ சீனியர் செகண்டரி பள்ளி

**வகுப்பு: நான்கு** **நாள்: வியாழன்**

**தேதி: 04 / 06 / 2020**

## பாடம் 5 பண்படுத்தும் பழமொழிகள்

**செயல்பாடு -8**

**I. பழமொழியை நிறைவு செய்க**

1. யானைக்கு ஒரு காலம் வந்தால் ------------->

2. _____________ --------------> கடிக்காது

3. நாயைக் கண்டால் --------------->

4. கல்லைக் கண்டால் -------------->

5. _______________ ----------------> அளந்து போடணும்.

**II. வினாக்களுக்கு விடையளி**

1. தாத்தாவுடன் சிறுவன் எங்கு சென்றான்?

தாத்தாவுடன் சிறுவன் வாரச் சந்தைக்கு சென்றான்.

2. ஆ நெய், பூ நெய் எவற்றைக் குறிப்பிடுகின்றன?

ஆ நெய் என்பது பசுவின் நெய் பூ நெய் என்பது தேன். 40 வயதிற்குள் பசுவின் நெய்யும் 40 வயதிற்கு மேல் தேனும் உண்டால் நோயற்ற வாழ்வு வாழலாம்.

3. "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு "இப் பழமொழியின் பொருளை சொந்த நடையில் கூறுக.

அகத்தில் போட்டாலும் அளந்து போடணும் அதாவது எதையும் புரியாமல் மனதில் செலுத்தக்கூடாது. படிக்கும் அத்தனை செய்திகளையும் புரிந்து கொண்டு படித்தால் வேண்டும்.

**எஸ்.பி.ஐ.ஓ.ஏ சீனியர் செகண்டரி பள்ளி, திருச்சி – 07**

**வகுப்பு : IV** **நாள் : வியாழன்**

**தேதி: 11. 06. 2020**

**செயல்பாடு – 9**

**பாடம் – 6 முயல் அரசன்**

**I. சரி தவறுக்கான குறியீட்டை பொருத்துக. (சரி ✓ தவறு × )**

1 புலி முயலின் மூதாதையரைக் கொன்று தின்று விட்டது (சரி)

2 முயல் புலிக்குக் கரும்பு கொடுத்தது (தவறு)

3. விலங்குகளின் கூட்டம் நடந்த போது புலி தூங்கிக் கொண்டிருந்தது. (தவறு)

4. முயல் புலியிடம் காட்டிலுள்ள விலங்குகள் தன்னைக் கண்டு அஞ்சுவதாகக் கூறியது (சரி)

5 முயல் புலியைக் காட்டிலிருந்து ஆட்சி செய்ய வேண்டுமெனக் கூறியது (தவறு)

**II. வினா - விடை தருக**

1 முயலின் கவலைக்குக் காரணம் என்ன?

புலிக்கு கிடைக்கும் மரியாதை தனக்குக் கிடைக்கவில்லையே என்பதே முயலின் கவலைக்குக் காரணம் ஆகும் .

2. விலங்குகளின் கூட்டத்தில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டதாக முயல் கூறியது?

நீ இந்தக் காட்டின் அரசனாக இனிமேலும் நீடிக்கக் கூடாது என்று எல்லா விலங்குகளும் ஒரே மனதாகத் தீர்மானம் நிறைவேற்றின

3 முயல் தான் அரசன் என்பதை நிரூபிக்க புலியை என்ன செய்யக் கூறியது?

என்னை உன் முதுகில் ஏற்றிச் செல் எல்லா விலங்குகளும் என்னைக் கண்டு அஞ்சுவதை நீ புரிந்து கொள்வாய் எனக் கூறியது.

4. புலியை மன்னித்து விட்டு விட முயல் கூறிய நிபந்தனை என்ன?

உன்னை மன்னித்து விட்டு விடமென்றால் நீ இந்தக் காட்டை விட்டு ஓடி விட வேண்டும் என நிபந்தனை விதித்தது.

5 விலங்குகள் உண்மையில் எதைக் கண்டு அஞ்சின ?

விலங்குகள் உண்மையில் புலியைக் கண்டு தான் அஞ்சினர்

**எஸ். பி. ஐ. ஓ. ஏ. சீனியர் செகண்டரி பள்ளி, திருச்சி -7**

**வகுப்பு IV** **நாள் வியாழன்**

**தேதி 18-06-2020**

**இணையவழித்தேர்வு பாடம் 1, 2 திருப்புதல் பயிற்சித்தாள்**

அன்பு மாணவர்களே ! எதிர் வருகின்ற **22ம்** தேதி தமிழ் இணைய வழித் தேர்வு **25 மதிப்பெண்களுக்குக் கொள் குறி வகை** (Objective Type) தேர்வு நடைபெற உள்ளது இத்தேர்விற்கு தங்களைத்தயார் செய்யும் விதமாக இப்பயிற்சித்தாள் அமைக்கப்பட்டுள்ளது இதனை தெளிவாக திருப்புதல் செய்து முழு மதிப்பெண் பெறும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பாடம் -1(அன்னைத்தமிழே )**

- அன்னைத்தமிழே என்ற பாடலின் ஆசிரியர் – நா. காமராசன்
- உயிரில் கலந்தவளாக இருப்பவள் யார் – தமிழன்னை
- என்னுடன் சேர்ந்து வளர்பவள் யார் – தமிழன்னை
- எதற்க்காக நான் இவ்வுலகில் பிறந்தேன் -தமிழன்னையை புகழவே
- எதைகொண்டு மட்டும் உன்னுடைய புகழை கூற முடியவில்லை - சொல்லை கொண்டு மட்டும்
- அன்னை + தமிழே சேர்த்து எழுதக்கிடைப்பது -அன்னைத்தமிழே
- பிறப்பெடுத்தேன் இச்சொல்லைப் பிரித்து எழுத கிடைப்பது -பிறப்பு + எடுத்தேன்
- மறந்துன்னை இச்சொல்லைப் பிரித்துஎழுதக் கிடைப்பது -மறந்து +உன்னை
- சிற்ப்படைந்தேன் இச்சொல்லைப் பிரித்துஎழுதக் கிடைப்பது -சிறப்பு + அடைந்தேன்
- என்னில் என்ற சொல்லின் பொருள் -எனக்குள்
- வளர்பவளே என்ற சொல் போல் ஒரே ஓசையில் முடியும் சொல்லை எழுதுக - கலந்தவளே

## பாடம்-2(பனைமரச்சிறப்பு)

- சாலையில் கிடந்த பழத்தின் பெயர் என்ன- பனம்பழம்
- பனைமரம் எவ்வாறு வளரக்கூடியது -நீளமாக
- பனைமரத்தின் உறுப்புக்கள் எத்தனை – 12
- கற்பகதரு என்று அழைக்கப்படுவது -பனைமரம்
- பனைமரத்திலிருந்து கிடைக்கும் உணவுப்பொருள்கள் யாவை – நுங்கு, பனங்கிழங்கு
- பனைஓலைகள் எதற்கு பயன்படுகின்றன -கூடை முடைய
- பனைமரம் எதனை தாங்கும் வலிமை பெற்றது – புயலை தாங்கும்
- நம்முடைய பழங்கால இலக்கியங்கள் எழுத துணை புரிந்தது -பனை ஓலைகள்
- பனைமரம் வேரின் பயன் யாது – நீர் பாதுகாப்பு
- பனைமரம் குழந்தைகளுக்கு என்ன பயன் தருகிறது – பனங்காய் வண்டி, காற்றாடி
- பனைமரம் அழிவிற்கு காரணம் யாது -எரிபொருள் பற்றாக்குறை
- பனைமர அழிவினால் அழிந்த பறவைகள் - பனங்காடை
- பனைமரம் தமிழ்நாட்டின் __________மரம் -மாநில மரம்
- பனைமரம் எங்கு நன்றாக வளரும் – குளம், ஆறு, குட்டை
- உயர என்னும் சொல்லின் எதிர்சொல் – தாழ
- வல்லமை என்ற சொல்லின் பொருள் -வலிமை
- விழுந்து என்ற சொல்லின் எதிர்சொல் -எழுந்து
- கரையோரம் இச்சொல்லை பிரித்து எழுத கிடைப்பது – கரை +ஓரம்
- அங்கெல்லாம் இச்சொல்லை பிரித்து எழுத கிடைப்பது – அங்கு +எல்லாம்
- பிரித்து எழுதுக : சாலையோரம், குருத்தோலை = சாலை +ஓரம், குருத்து +ஓலை